சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 114 | 16-08-2013



08-08-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

## தலைப்பு : இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகள்

இலங்கையில் இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகளில் சில தெரிவுகள் தலைமுறைகளோடு மாறாமல் தொடர்ந்துகொண்டிருந்தாலும் பல தெரிவுகள் கடந்த பத்தாண்டுகளில் மிக வேகமாக மாறியிருக்கின்றன.

இணையம், கணினி, கையடக்கக்கருவிகள் போன்றவற்றினதும் புதிய கேளிக்கை வழிமுறைகளினதும் வரவுடன் புதிது புதிதாக பல பொழுதுபோக்குத் தெரிவுகள் உருவாகியுள்ளன.

பாடசாலை நேரத்தில் வகுப்பறைகளுள் மாணவர்களுக்கு இருக்கும் பொழுதுபோக்குத் தெரிவுகள் இன்னமும் மாறாமல் அப்படியே இருக்கிறது. மின்னணுக்கருவிகள் பாடசாலைகளுள் அனுமதிக்கப்படாமை இதற்கான முக்கிய காரணமாகும்.

இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகள் படிப்படியாக இளைஞர்களை உண்மையான சமூகமயமாக்கத்திலிருந்து தனிப்படுத்தி, தனியன்களாக மாற்றிவிடுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது. கூடி விளையாடுதல், விளையாட்டுத் திடல்களில் இளைஞர்கள் கூடுதல் போன்றவை எல்லாம் மெல்ல மெல்ல அருகி, விளையாட்டு என்பது தொலைக்காட்சியில் பார்க்கப்படும் ஒன்றாகவும், கணினியில் விளையாடப்படும் விடயமாகவும் மாறி வருகிறது.

ஆண்களின் பொழுதுபோக்குத் தெரிவுகளும் பெண்களின் பொழுதுபோக்குத் தெரிவுகளும் பல இடங்களில் வேறுபட்டும் பல இடங்களில் ஒன்றுபட்டும் உள்ளன. இந்த வேறுபாடுகளின் பின்னாலுள்ள பால்நிலை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவேண்டியன.

நகரங்களில் வாழும் இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகளுக்கும் கிராமங்களில் காணப்படும் தெரிவுகளுக்குமிடையில் தெளிவான வேறுபாடுகள் உண்டு.

இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகளை ஆராயும் போது, அப் பொழுதுபோக்குத் தெரிவுகளைத் தெரிவு செய்வது யார் என்ற கேள்வியே முக்கியமானதாகிறது.

இளைஞர்கள் தமது ஒய்வு நேரத்தினை எவ்வாறு செலவழிக்கவேண்டும் என்பதையும் எவ்வாறு செ... ஊடகங்களும் பெரும் நிறுவனங்களும் தீர்மானிக்கின்றன என்பதே உண்மையாகும்.

இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகள் மாபெரும் வருமானமீட்டும் வழியாகப் பெரு நிறுவனங்களால் பார்க்கப்படுகின்றன. மிகப்பெரிய முதலீடுகளுடன் இளைஞர்களின் ஒய்வு நேரத்தைத் திருடி இலாபம் பண்ணக்கூடிய வாய்ப்புக்களை அவை தேடுகின்றன.

இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகள் மாபெரும் வருமானமீட்டும் வழியாகப் பெரு நிறுவனங்களால் பார்க்கப்படுகின்றன. மிகப்பெரிய முதலீடுகளுடன் இளைஞர்களின் ஒய்வு நேரத்தைத் திருடி இலாபம் பண்ணக்கூடிய வாய்ப்புக்களை அவை தேடுகின்றன.

இதனால், இளைஞர்களின் ஒய்வு நேரத்தினை முழுக்க முழுக்கத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அவை முயல்கின்றன. இதன்வழியாகவே இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகள் தெரிவு செய்யப்பட்டு இளைஞர்களுக்குத் திணிக்கப்படுகின்றன.

தொலைக்காட்சி, சினிமா, விளையாட்டு ஒளிபரப்புக்கள், கணினி விளையாட்டுக்கள், இணையச் சமூக வலையமைப்புக் கம்பனிகள்

மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

இந்திய அரசியலில் தெலுங்கானா

15-08-2013



தெலுங்கானாப் போரில் தீரமிகு பெண்கள்

*[ஆசிரியரின் பெயர்: எம்.ஏ. பழனியப்பன் | விலை: ரூ. 50.00 | வெளியீடு: அறிவுப் பதிப்பகம், சென்னை-14]*

தேர்தல் பாதைக்கு இழுத்துப் போய் தெலுங்கானாவின் இறுதி லட்சியத்தை மூழ்கடித்து விட்டோம் என்ற கனவில் மிதக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் கண்களை உறுத்தும்படி மேற்கு வங்கத்தின் நந்திகிராமிலும், லால்கரிலும் தெலுங்கானாப் போரின் தீரமிகு பெண்கள் மீண்டும் எழுந்து நிற்கிறார்கள்.இப்படி எல்லா இன்னல்களையும் எதிர்த்துப் போராடும் மனவலிமை ஒரு பெண்ணுக்கு எங்கிருந்து வந்தது என்று நீங்கள் கேட்டால், பண்டி ரமாக்காவும், லச்சம்மாவும், ராம் பாயம்மாவும் எங்களது வலிமை சமூக உணர்வில், கம்யூனிச சித்தாந்தத்தில் இருக்கிறது என்கிறார்கள் அழுத்தமாக. இது சாத்தியமா ? என்பவர்கள் அவர்களுடனேயே விவாதிக்க இந்தப் புத்தகத்திற்குள் செல்லுங்கள் - வினவு

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

**இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகள்.**

முன்பக்கத் தொடர்ச்சி..

என்று மிகப்பெரிய வணிகத் தொழிற்துறையே இளைஞர்களின் ஓய்வு நேரத்தினைத் தமது இலாபமாக மாற்ற மும்முரமாயிருக்கின்றன. இவ்வாறு முதலிடும் நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களாகவே ப்ரும்பாலும் இருப்பதால் உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

இளைஞர்களின் பொழுதுபோக்குத் தெரிவுகளைப் பெருநிறுவனங்களுடன் சேர்ந்து அரசாங்கங்களும் அதிகார நிறுவனங்களும் வடிவமைக்கின்றன. இளைஞர்கள் அதிகார நிறுவனங்களுக்கு எதிராகப் போராடக்கூடிய வல்லமையும் துணிவும் உடையவர்களாகையால் அவர்களை முற்றுமுழுதாக அரசியல் நீக்கம் செய்து தனித்தனி ஆட்களாக மாற்றி விட இவை பெரிதும் முயல்கின்றன.

அரசுகளே அனுசரணையளித்து நடத்தும் கேளிக்கை நிகழ்ச்சிகள், அரச தொலைக்காட்சிகளும் ஊடகங்களும் இளஞர்களிடம் திணிக்கும் கேளிக்கை/நுகர்வு விருப்பு போன்றவை இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

இவ்வாறு இளைஞர்கள் தனிமைப்படுத்தப்படுவதும் அரசியல் நீக்கம் செய்யப்படுவதும் அதிகாரங்களின் இருப்புக்கும் பெரு நிறுவனங்களின் இலாப வேட்டைக்கும் உதவுமே ஒழிய இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்களது ஆளுமை வளர்ச்சியும் விடுதலையும் எதிரானதாகவே அமையும்.

இளைஞர்களது ஓய்வு நேரத்தை, அவர்களது மகிழ்ச்சியை அவர்களுக்கானதாக, அவர்களுக்கே மீட்டுக்கொடுப்பதென்பது அதிகாரங்களுக்கெதிரான போராட்டமாகவே அமையப்போகிறது.

**இந்திய அரசியலில் தெலுங்கானா**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

* காலனித்துவக் காலத்திலும் அதற்கு முன்னும் தெலுங்கானா

* பிரிட்டிஷ் வெளியேற்றத்துக்குப் பின்னர் தெலுங்கானா

* இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தெலுங்கானா போராட்டம்

* ஆந்திர மாநிலப் பிரிப்பு

* தனித் தெலுங்கானா இயக்கமும் அதன் அரசியற்

* பொருளாதாரப் பின்னணிகளும்

* நடப்பு நிலவரம்







சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA